# பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

## வலு

நீர் மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் 1988 இன் வலு நிலைமை குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இச் சாதகமான அபிவிருத்திக்கு உதவியுள்ளது. நீர்த்தேக்கங்களில் நீர் மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து இலங்கை மின்சபை நாட்டின் வலுவிற்கான கேள்வியில் பெரும் பங்கினை நீர் மின்வலு மூலமாக ஈடுசெய்யக் கூடியதாக இருந்தமையின் காரணமாக வெப்பமின் வலு உருவாக்கத்தில் தங்கியிருக்க வேண்டியமை குறைவடைந்தது. இவ்வபிவிருத்திகள் பெற்றோலிய இறக்குமதிகளின் செலவினத்தில் குறைவினை விளைவித்தன. எனினும் மின் கடத்திகளுக்கும் மின் மாற்றிகளுக்கும் விளைவிக்கப் பட்ட சேதத்தின் காரணமாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் வலுத்துறை எதிர்பாராத பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. 1988 இன் இறுதிக் கிழமைகளில் பாதுகாப்புச் சூழ்நிலை குறிப்பிடத்தக்களவிற்குச் சீரடைந்தமையுடன் நிலைமை முன்னேற்றம் கண்டது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே 1988 இல் மற்றைய மரக்கட்டைக் கரி விடயங்களுடன் சேர்ந்து விறகு, வேளாண்மை எச்சங்கள், விலங்குக் கழிவு என்பன இலங்கையில் மிகப் பெரும் வலு மூலமாகத் தொடர்ந்தும் விளங்கின. நாட்டின் மொத்த வலு வழங்கலில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகை கூறும் இம்மூலங்கள் 1988 இல் கிட்டத்தட்ட 46 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமான தொகையை வழங்கியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோலியம், மின்வலு, திரவப் பெற்றோலிய வாயு மற்றும் சிறிய அளவு நிலக்கரி என்பன எஞ்சிய பங்கிற்கு வகை கூறின.

ஏப்பிறலில், நிலம்பே நீர் மின்வலுச் செயற்றிட்டமும் (ஒவ்வொன்றும் 1.6 மெகாவாட்டினைக் கொண்ட இரு விசையாழிகள்) திசெம்பரில் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டத்தின் மூன்றாவது மின்விசைஆழியும் (67 மெகாவாட்) தொடக்கப்பட்டதுடன் இவ்வாண்டில் நீர் மின்வலுவின் மொத்த இயலளவு 938.45 மெகாவாட்டிற்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தது. 270 மெகாவாட் வெப்ப மின்வலு இயலளவுடன் சேர்ந்து மின்வலு உருவாக்கத்தின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு 1988 இறுதியில் 1,208.45 மெகாவாட்டிற்கு அதிகரித்தது. களனிதிஸ்ஸ வெப்பவலு நிலையத்தின் செப்பனிடல் காரணமாக ஆய்விற்குரிய ஆண்டில் இது (50 மெகாவாட்) தொழிற்படவில்லை.

நீர் மின்வலுவின் இயலளவு உயர்த்தப்பட்டமை, உருவாக்கத்திலும், மின் கடத்திகளின் அமைப்பிலும் முன்னேற்றம் கண்டமை என்பனவற்றின் காரணமாக இலங்கை மின்சபை, 1988 இல் உருவாக்கம் மற்றும் மின் கடத்தி காரணமாக ஏற்படும் இழப்புக்களை 16 சதவீதத்தில் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது. அதிகரித்த நீர் மின்வலு வெப்ப மின்வலு உருவாக்கத்தில் பெற்றோலியத்தின் நுகர்வினைக் குறைத்தது மட்டுமின்றி வலுவிற்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியையும் ஈடுசெய்தது. இதன் விளைவாக வர்த்தக வலு வழங்கலில் நீர் மின்வலுவின் பங்கு 1987 இன் 39 சதவீதத்திலிருந்து 1988 இல் 44 சதவீதத்திற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் இலங்கை மின் சபையின் மொத்த வலு உருவாக்கம் 28,000 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக அமைந்து முன்னைய ஆண்டின் உருவாக்கத்தினைவிட 3 சதவீதம் உயர்வானதாக இருந்தது. நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்தமையினால் நீர் மின்வலுப் பொறிகளை ஏறத்தாழ முழு இயலளவில் தொழிற்படுத்தக் கூடியதாக இருந்தது. இதன் விளைவாக நீர் மூலமாக உருவாக்கப்பட்ட வலுவின் சார்பு ரீதியான பங்கு 1987 இன் 80 சதவீதத்திலிருந்து 1988 இன் 93 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதனையொட்டி, வெப்பவலு உருவாக்கம் 1987 இன் 5,300 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களிலிருந்து 1988 இல் 2,020 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு 62 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் மின்வலு உருவாக்கத்தின் செலவைக் குறைவடையச் செய்தது.

அட்டவணை 1.20

**திருத்தியமைக்கப்பட்ட மின்வலு வீதங்கள் ***

| துறை | | | பழைய வீதம் ரூ. ச. | திருத்தியமைக்கப்பட்ட வீதம் ரூ. ச. |
|---|---|---|---|---|
| **வீட்டுப் பாவனை** | | | | |
| அலகுகள் | 0 — 10 | ... | 0.50 | 0.55 |
| | 11 — 100 | ... | 0.90 | 1.05 |
| | 101 — 450 | ... | 1.80 | 2.00 |
| | 450 இற்கு மேல் | | 2.25 | 2.50 |
| **கைத்தொழில்** | | | | |
| அலகுக் கட்டணம் — | வகுப்பு I | ... | 1.55 | 1.75 |
| | வகுப்பு II | ... | 1.45 | 1.60 |
| | வகுப்பு III | ... | 1.25 | 1.50 |
| **பொதுவான நோக்கங்கள்** | | | | |
| அலகுக் கட்டணம் — | வகுப்பு I | ... | 1.75 | 2.00 |
| | வகுப்பு II | ... | 1.60 | 1.90 |
| | வகுப்பு III | ... | 1.50 | 1.80 |
| **உணவகங்கள்** | | | | |
| அலகுக் கட்டணம் — | வகுப்பு I | ... | 1.70 | 1.95 |
| | வகுப்பு II | ... | 1.60 | 1.85 |
| | வகுப்பு III | ... | 1.50 | 1.75 |
| **சமயப் பணிமனைகளும் அறக்கொடைநிறுவனங்களும்** | | | | |
| அலகு | 0 — 150 | ... | 0.50 | 0.60 |
| அலகு | 150 இற்கு மேல் | ... | 0.50 | 2.00 |

மூலம்: இலங்கை மின் சபை.

* 100 அலகுகளுக்கு மேற்பட்ட மின்வலு நுகர்வின் மீது எரிபொருள் சீராக்கக் கட்டணம் அறவிடப்படுகின்றது.

குறிப்புகள்: வகுப்பு I — மின்வலு நிரம்பல் 400/230 வோல்ட்டுக்கள். ஒப்பந்தக் கேள்வி 50 கி.வா. இற்கும் குறைவானது.

வகுப்பு II — மின்வலு நிரம்பல் 400/230 வோல்ட்டுக்கள். ஒப்பந்தக் கேள்வி 50 கி.வா. இற்குச் சமானம் அல்லது மேல்.

வகுப்பு III — மின்வலு நிரம்பல் 11,000 வோல்ட்டுக்கள்.

1988 இல் மின்வலுவின் மொத்த விற்பனை 1987 இன் 22,530 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 23,410 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களுக்கு 4 சதவீதத்தினால் உயர்வடைந்தது. வர்த்தக நடவடிக்கைகளுக்கான விற்பனைகள் 4,420 இலட்சம் கிலோவாட் மணித்தியாலத்திற்கு 5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. கைத்தொழில் மற்றும் வீட்டுத்துறைகளின்

நுகர்வு ஒவ்வொன்றும் 4 சதவீதத்தினுல் முறையே 8,980 இலட்சம் கிலோவாட் மணித்தியாலத்திற்கும் 3,970 இலட்சம் கிலோவாட் மணித்தியாலத்திற்கும் அதிகரித்தன. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகையான விற்பனைகள் 5,900 இலட்சம் கிலோவாட் மணித்தியாலத்திற்கு 3 சதவீதத்தினுல் உயர்வடைந்தன. ஆண்டின் இறுதிக் காலாண்டில் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரிக்காது இருந்திருப்பின் இவ் வளர்ச்சி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்திருத்திருக்கும்.

அட்டவணை 1.21

**வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1987 – 1988**

| விடயம் | அலகு | 1987 | 1986க்கு மேலாக சதவீத மாற்றம் | 1988 (அ) | 1987க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| **1. பெற்ரோலிய உற்பத்திகள்** | | | | | |
| 1.1 ஏற்றுமதிகள் ... | ரூ. ப. இ. | 2,592.2 | 9.9 | 2,265.4 | — 12.6 |
| | சிஎஉ ப.இ. | 68.0 | — 5.2 | 53.0 | — 22.1 |
| 1.2 இறக்குமதிகள் ... | ரூ. ப. இ. | 8,715.8 | 38.5 | 7,839.2 | — 10.1 |
| | சிஎஉ ப.இ. | 228.8 | 19.6 | 183.3 | — 19.9 |
| 1.3 இறக்குமதி செய்யப்பட்ட தொகை | | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | மெ. தொ. | 1,778,853 | 8.6 | 1,894,135 | ட.5 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | ,, | 251,786 | 70.7 | 143,079 | — 43.2 |
| 1.3.3 ஏனைய உற்பத்திகள் ... | ,, | 25,738 | 3.6 | 26,688 | 3.7 |
| 1.4 மசகெண்ணெயின் சராசரி விலை ... | ரூ./பீ. ஒ. | 543.29 | 19.6 | 486.85 | — 10.4 |
| | ஐ.அ.டொ./பீ. ஒ. | 18.45 | 13.5 | 15.38 | — 16·6 |
| 1.5 உள்நாட்டு விற்பனைகள் | | | | | |
| 1.5.1 சிறப்புப் பெற்ரேல் ... | மெ. தொ. | 140,402 | 7.5 | 154,507 | 10.0 |
| 1.5.2 தன்னியக்க டீசல் .. | ,, | 497,303 | 1.7 | 495,295 | — 0.4 |
| 1.5.3 பார டீசல் ... | ,, | 131,802 | ** | 48,890 | — 62.9 |
| 1.5.4 சிறப்பு டீசல் ... | ,, | 20,558 | 29.5 | 19,334 | — 6.0 |
| 1.5.5 மண்ணெண்ணெய் ... | ,, | 155,575 | 0.9 | 157,164 | 1.0 |
| 1.5.6 உலைஎண்ணெய் ... | ,, | 161,668 | 24.9 | 165,503 | 2.4 |
| 1.6 உள்நாட்டு விலை | | | | | |
| 1.6.1 சிறப்புப் பெற்ரேல் ... | ரூ./இலிற்றர் | 13.50 | — | 13.50 | — |
| 1.6.2 தன்னியக்க டீசல் ... | ,, | 8.13 | — | 8.13 | — |
| 1.6.3 பார டீசல் ... | ,, | 7.83 | — | 7.83 | — |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | ,, | 9.28 | — | 9.28 | — |
| 1.6.5 மண்ணெண்ணெய் ... | ,, | 6.58 | — | 6.58 | — |
| 1.6.6 உலை எண்ணெய் | | | | | |
| —500 செக்கண்ட் ... | ,, | 4.22 | — | 4.22 | — |
| —800 செக்கண்ட் ... | ,, | 3.87 | — | 3.87 | — |
| —1000 செக்கண்ட் ... | ,, | 3.72 | — | 3.72 | — |
| 1.6.7 திலச்கீல் ... | ரூ./கி.கி. | 7.22 | — | 7.22 | — |
| **2. மின் வலு** | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,138.25 | 12.7 | 1,208.45 | 6.2 |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 868.25 | 16.3 | 938.45 | 8.1 |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 270.00 | 2.3 | 270.00 | — |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | ப.இ.கி.வா.ம | 2,707.6 | 2.1 | 2,799.5 | 3.4 |
| 2.2.1 நீர் மின் | ,, | 2,177.5 | — 17.7 | 2,597.7 | 19.3 |
| 2.2.2 வெப்ப மின் ... | ,, | 530.1 | *** | 201.8 | — 61.9 |
| 2.3 மொத்த விற்பனைகள் ... | ப.இ.கி.வா.ம | 2,252.8 | 0.9 | 2,341.2 | 3.9 |
| 2.3.1 வீடு ... | ,, | 382.2 | 3.5 | 397.0 | 3.9 |
| 2.3.2 கைத்தொழில் ... | ,, | 865.9 | — 6.4 | 897.8 | 3.7 |
| 2.3.3 வர்த்தகம் ... | ,, | 418.9 | 9.8 | 441.5 | 5.4 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | ,, | 570.6 | 5.0 | 590.1 | 3.4 |
| 2.3.5 தெரு விளக்கு ... | ,, | 15.2 | 16.0 | 14.8 | — 2.6 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை பெற்ரேலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சபை

** 6 மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பு
*** 82 மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பு

மின்வலுத் தீர்வைகள் 1988 இன் தொடக்கத்திலிருந்து மேல்நோக்கித் திருத்தப்பட்டதுடன் மாதமொன்றிற்கு 100 அலகுகளுக்குக் கூடுதலான நுகர்வின் மீது 20 சதவீதமான எரிபொருள் சீராக்கக் கட்டணம் விதிக்கப்பட்டது. வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 15—20 சதவீத வீச்சில் இருந்ததுடன் திருத்தியமைக்கப்பட்ட வீதங்களின் விபரங்கள் அட்டவணை 1.20 இல் தரப்பட்டுள்ளன.

குறைவடைந்த வருவாய், மூலதன உள்ளார்ந்த அமைப்புக்களின் இழப்புக்கள் ஆகிய இரு நியதிகளிலும் உள்நாட்டுக் குழப்பங்கள் வலுத்துறையைத் தொடர்ந்தும் பாதித்தன. 1988 இல் ஏற்பட்ட சேதங்கள் ஏறத்தாழ ரூ. 3,330 இலட்சமென இலங்கை மின்சபை மதிப்பிட்டுள்ளதுடன் இது ரூ. 830 இலட்சம் கொண்ட மூலதன இழப்புக்களையும், ரூ. 2,500 இலட்சம் கொண்ட வருமான இழப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. இது இலங்கை மின்சபையின் வர்த்தகத் தொழிற்பாடுகளை மிகக் கடுமையாகப் பாதித்தது. எனினும் 1988 இன் இறுதிக் கிழமைகளில் பாதுகாப்பு நிலமைகளில் ஏற்பட்ட ஓரளவு முன்னேற்றத்துடன் அவசர திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக வலு வழங்கல் நிலைமை முன்னேற்றம் கண்டது.

பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெயின் விலை வீழ்ச்சியுற்றமை, வெப்ப வலுவின் குறைந்த உருவாக்கத்தின் விளைவாகப் பார டீசலின் நுகர்வு குறைவடைந்தமையுடன் இணைந்தமையின் காரணமாக 1988 இல் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகள் கணிசமாகக் குறைவடைந்தன. 1987 இன் மொத்த இறக்குமதிகளில் 14 சதவீதத்திற்கு வகை கூறிய பெற்றோலியத்தின் மீதான இறக்குமதிச் செலவு 1988 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மசகெண்ணெய் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளினது இறக்குமதிகளின் அளவு முறையே 1,894,135 மெற்றிக் தொன்களுக்கு 6 சதவீதத்தினாலும் 26,688 மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தினாலும் உயர்வடைந்தபோதும் பெற்றோலிய இறக்குமதிகளின் மீதான மொத்தச் செலவினம் சிஎஉ நியதிகளில் 20 சதவீதத்தினாலும் (சிஎஉ 1,830 இலட்சம்) ரூபா நியதிகளில் (ரூ. 78,390 இலட்சம்) 10 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

1988 இன் உள்ளூர் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விற்பனை விலைகள் மாற்றமின்றியிருந்தவேளையில் பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெயின் சராசரி விலைகள் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ. டொலர் 15.38 இற்கு (ரூ. 487) 17 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தன.

வெப்பவலு உருவாக்கத்தில் ஏற்பட்ட குறைவின் விளைவாக, உள்நாட்டுச் சந்தையில் பார டீசலுக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. 1988 இல் பார டீசலின் விற்பனை 48,890 மெற்றிக் தொன்களுக்கு 63 சதவீதத்தினால் குறைவடைந்தது. இதே போன்று தன்னியக்க டீசலின் விற்பனையும் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சந்தையில் மற்றைய அனைத்துப் பெற்றோலியத்தினதும் விற்பனைகள் மிதமாக அதிகரித்தன. சிறப்புப் பெற்றோல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய் என்பனவற்றின் விற்பனைகள் முறையே 10 சதவீதத்தினாலும், 2 சதவீதத்தினாலும் ஒரு சதவீதத்தினாலும் உயர்வுற்றன.

**போக்குவரத்து**

1988 இல் போக்குவரத்து மிகக் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் நடவடிக்கைகள் உள்நாட்டுக் குழப்பங்களினால் குறிப்பாக ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இலங்கைப் புகைவண்டியின் தொழிற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தவேளையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளின் காரணமாக அப்பிரதேசங்களின் பணிகள் முழுமையாக இடை நிறுத்தப்பட்டன. அதேவேளை ஊர்திகளினதும் உதிரிப்பாகங்களினதும் உயர்ந்த இறக்குமதிச் செலவு காரணமாகத் தனியார் துறை அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்த முடியாமல் இருந்தது. தனியார் துறையின் போக்குவரத்துப் பணிகளும் தொடர்ந்து செல்லும் உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிக்கப்பட்டன.

இவ்வாண்டில் இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் தொழிற்பாட்டு அளவுகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் 3,320 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதே போன்று இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளினால் நாளொன்றுக்கு தொழிற்படுத்தப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 4,676 உடன் ஒப்பிடுகையில் 1988 இல் 4,421 ஆக விளங்கியது. இவ்வீழ்ச்சிக்கு உள்நாட்டுக் குழப்பங்களே பெருமளவுக்குக் காரணமாகும். வட பிரதேசம் தவிர்ந்த அனைத்துப் பிரதேசங்களினதும் தொழிற்பாடுகளில் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. அத்துடன் மேற்கு, வட மத்தி, வட மேற்கு, ஊவா பிரதேசங்களின் அட்டவணையிடப்பட்ட பணிகள் உள்நாட்டுக் குழப்பங்களினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் அவை தாங்கள் அட்டவணையிட்ட பணிகளில் சராசரியாக 61 சதவீதத்தினை மட்டுமே தொழிற்படுத்தக் கூடியனவாக இருந்தன.

இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் ஊர்தித் தொகுதி பொதுவாகக் குறைக்கப்பட்டதனால் தொழிற்பாட்டு அளவு பாதிக்கப்பட்டது. தற்போதுள்ள மொத்தத் தொகுதியில் ஏறத்தாழ 54 சதவீதம் பணிகளுக்கு ஏற்றவையல்ல. குழப்பங்களின்போது ஊர்தித் தொகுதிகளுக்கு விளைவிக்கப்பட்ட சேதம் இன்னொரு பிரச்சினையாக இருந்தது. சில புதிய பேருந்துகள் உட்பட மொத்தமாக 609 பேருந்துகள் அழிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. இதனால் இலங்கையில் பிரதேச போக்குவரத்துச் சபைக்கு ஏற்பட்ட மூலதன இழப்பு ரூ. 630 இலட்சம் வரையிலிருந்தது.

தற்போதுள்ள பணிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலமும் ஊர்தித்தொகுதியினை அதிகரிப்பதன் மூலமும் பொது மக்களுக்குக் கூடியளவிற்கு நம்பத்தகுந்த பணிகளை வழங்குவதே இவ்வாண்டில் இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் முதன்மை நோக்கமாக இருந்தது. இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் பணிகள், சிக்கனமற்ற கிலோமீற்றர்களைக் குறைப்பதன் மூலம் அடிக்கடி திருத்தியமைக்கப்பட்டதுடன் கேள்வியின் மாறுகின்ற தன்மையும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டது. அதேவேளை இலங்கைப் பிரதேச போக்குவரத்துச்

சபை ஊர்தித் தொகுதியை முன்னேற்றுவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டது. இதன்படி பழுதடைந்த மற்றும் பழைய ஊர்திகள் சிலவற்றை அகற்றும்பொருட்டு தற்போதுள்ள ஊர்தித் தொகுதியுடன் 320 பேருந்துகள் சேர்க்கப்பட்டன.

அட்டவணை 1.22

**போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள் 1987 – 1988**

| விடயம் | அலகு | 1987 | 1986இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1988 (அ) | 1987 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் ... | எண்ணிக்கைகள் | | | | |
| 1.1 இ. . போ. சபையின் பேருந்துகள் ... | ,, | 85 | – 66.5 | 245 | 188.2 |
| 1.2 தனியார் சொகுசு வண்டிகள் ... | ,, | 1,151 | – 35.4 | 863 | – 25.0 |
| 1.3 தனியார் ஊர்திகள ... | ,, | 7,695 | 5.5 | 8,031 | 4.4 |
| 1.4 இரட்டை நோக்கங்களுக்கான வண்டிகள் | ,, | 3,234 | – 16.9 | 3,002 | – 7.2 |
| 1.5 உந்து ஈருருளிகள் ... | ,, | 29,041 | 9.2 | 27,837 | – 4.1 |
| 1.6 சரக்குகள் கொண்டு செல்வதற்கான வண்டிகள் ... | ,, | 2,901 | – 13.4 | 2.504 | – 13.7 |
| 1.7 நில வண்டிகள் ... | ,, | 2,727 | – 28.0 | 2,342 | – 14.1 |
| 1.8 ஏனையவைகள் ... | ,, | 50 | 194.1 | 1 | – 98.0 |
| 2. இ.போ.சபை | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 371.2 | – 1.3 | 332.4 | – 10.5 |
| 2.2 பயணிக்ள் கிலோ மீற்றர்கள் ... | ,, | 15,974.0 | 5.4 | 15,413.0 | – 3.5 |
| 2.3 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 2,560.6 | 9.2 | 2,502.2 | – 2.3 |
| 2.4 மொத்தச் செலவு ... | ,, | 2,640.2 | 0.8 | வி.கி. | — |
| 2.5 மிகை/குறை (+/—) ... | ,, | – 79.6 | – 71.1 | வி.கி. | — |
| 3. இலங்கை புகைவண்டிப் பகுதி | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 8.2 | 3.8 | 7.2 | – 12 2 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ,, | 2,058.5 | 4.4 | 1,785.7 | – 13.3 |
| 3.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் ... | ,, | 195.0 | – 4.2 | 176.4 | – 9.5 |
| 3.4 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 487.0 | 1.0 | 437.1 | – 10.2 |
| 3.5 மொத்தச் செலவு ... | ,, | 834.9 | 8.3 | 916.0 | 9.7 |
| 3.6 மிகை/குறை (+/—) ... | ,, | — 347.8 | 20.3 | – 478.9 | 37.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை போக்குவரத்துச் சபை,
இலங்கை புகைவண்டிப் பகுதி,
உந்து ஊர்திகள் திணைக்களம்.

இவ்வழிமுறைகள் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் பொது மக்களுக்குத் திருந்திய பணிகளை வழங்குவதற்கு இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபையை இயலச் செய்தன. இக்காலப் பகுதியில் பயணிகள் கிலோ மீற்றர் நியதிகளில் அளவிடப்பட்டவாறு பயண அளவு முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியினை விட 4 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் இறுதிக் காலாண்டில் அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக இப்போக்கு முற்றாக மாற்றமடைந்து ஆண்டின் இறுதியில் பயணிகள் கிலோமீற்றர் 154,130 இலட்சத்திற்குக் குறைவடைந்து 4 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக 1988 இல் இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் வருவாய் ரூ. 25,020 இலட்சத்திற்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை 1988 இல் ஆறு பிரதேச போக்குவரத்துச் சபைகள் குறிப்பிடத்தக்க வருவாய் இழப்புக்களைக் கொண்டிருப்பது பற்றி அறிவிக்கப்பட்டது. உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட மொத்த இழப்பு ரூ. 2,200 இலட்சங்கள் வரையிலிருந்தது.

1988 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் நடவடிக்கைகள் மேலும் வீழ்ச்சியடைந்தன. தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 72 இலட்சமாக விளங்கி 12 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. 1987 இன் 3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் இது ஒப்பிடத்தக்கதாகும். இவ்வீழ்ச்சிக்கு வடக்கு, கிழக்குப் பாதைகளின் அட்டவணையிடப்பட்ட பணிகள் இடைநிறுத்தப்பட்டமை யும் மற்றைய பாதைகளின் புகைவண்டிப் பணிகளில் அடிக்கடி ஏற்பட்ட இடை யூறுகளும் பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கைப் புகைவண்டிப் பகுதி அட்டவணையிடப்பட்ட பணிகளில் 75 சதவீதத்தினை மட்டுமே தொழிற்படுத்தக் கூடியதாக இருந்தவேளையில் ஆண் டின் இறுதி இரு மாதங்களிலும் அதன் பணிகள் 25 சதவீதத்திற்குக் கட்டுப்படுத் தப்பட்டன. இப்போக்குகளைத் தொடர்ந்து பயணிகள் கிலோமீற்றர் 17,860 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதே போன்றே பொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் குறைவடைந்தமையின் கார ணமாக சரக்குத் தொன் கிலோமீற்றர்களும்கூட 10 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தன. 1988 இல் பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்துப் பணிகள் இரண்டிலும் பெறப்பட்ட வீழ்ச்சியின் விளைவாக இலங்கைப் புகைவண்டியின் வருவாய் ரூ. 4,370 இலட்சத்திற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ரூ. 9,160 இலட்சம் கொண்ட மொத்தச் செலவினத்திற்கெதிராக 1988 இல் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்புக்கள் 1987 இன் ரூ. 3,480 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,790 இலட்சமாகக் காணப் பட்டன.

இவ்வாண்டில் நாட்டின் குழப்ப நிலைமைகள் புகைவண்டிப் பாதை அமைப் பில் பெரும் சேதத்தை ஏற்படுத்தின. நான்கு புகைவண்டி நிலையங்கள், இரண்டு வலுப் புகைவண்டிகள், நான்கு பயணிகள் புகைவண்டிகள் நாசமாக்கப்பட்ட வேளையில் மூன்று புகைவண்டிகள் தடம்புரளச் செய்யப்பட்டன.

இப்பின்னடைவுகள் காணப்பட்டபோதும் இலங்கைப் புகைவண்டிப் பகுதி அதன் மூலதன இருப்புக்களை முன்னேற்ற பல நடவடிக்கைகளை எடுத்தது. இவ்வாண்டில் உருமேனியாவிலிருந்து 25 கொள்கலன் ஏந்திகள், 20 வலு புகை வண்டிகள், 133 பெட்டிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்ட வேளையில் சீமேந்துக் கலவையாலான புகையிரதப் பாதைக் கிடைக்கட்டைகளைச் செய்வதற் கான பொறியும் நிறுவப்பட்டது.

1988 இல் பயணிகள் பணியில் தனியார் துறையின் பங்களிப்பு மேலும் வீழ்ச்சியடைந்தது. 1988 இல் தனியார் சொகுசு வண்டி போக்குவரத்துத் திணைக் களத்தினால் பேருந்து தொழிற்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் எண்ணிக்கை 1,854 இற்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உந்து ஊர்தி கள் போக்குவரத்துத் திணைக்களத்தின் பதிவேடுகளும் தனியார் சொகுசு வண்டி களின் புதிய பதிவுகள் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டமையை எடுத்துக் காட்டியது. 1987 இன் 1,151 புதிய பதிவுகளுடன் ஒப்பிடுகையில் 1988 இல் 863 பதிவுகள் மட்டுமே காணப்பட்டன. இதற்கு ஊர்திகளினதும் உதிரிப்பாகங்களினதும் உயர்ந்த இறக்குமதிச் செலவுகளும், இத்துறையின் இலா பத் தன்மை குறைவுற்றமையுமே பெருமளவிற்குக் காரணமாகும்.

எனினும் பயணிகளுக்கான பெருமளவு வசதிகளுடன் புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் தற்போதுள்ள ஊர்தித் தொகுதி குறிப்பிட்டள விற்கு வலிமைப்படுத்தப்பட்டது. அதேவேளை ஊர்திப் பதிவுகளின் ஆண்டுப் புதுப்பித்தல் 1988 இல் 4,661 இற்கு ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினால் வீழ்ச்சி யடைந்தது. இவ்வீழ்ச்சி தனியார் துறையின் ஊர்தித் தொகுதி குறைவடைந்து செல்லும் நிலையை எடுத்துக் காட்டியது.

**வீடமைப்பு**

1988 இல் வீடமைப்பு அபிவிருத்தியின் முக்கிய தொனிப்பொருளாகப் பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் விளங்கியது. பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் புதிய வீடுகளை அமைத்தலுக்கான கடன்களை வழங்கல், தற்போதுள்ள வீடுகளைத் தரமுயர்த்தல், பரந்தளவு விருப்பத் தேர்வுகள் மூலமாக வறியோரின் புகலிடங்களை முன்னேற்றுதல் ஆகிய நியதிகளில் நன்மைகளை வழங்கு வதை இலக்காகக் கொண்டுள்ளது. அரசதுறை, தனியார்துறை ஆகிய இரண்டினை யும் இந்நிகழ்ச்சித் திட்டம் அடக்கியுள்ளதுடன் ''அரசின் ஆகக் குறைவான தலையிடும் வீடமைக்கும் சமுகத்தினரின் அதிகூடிய பங்களிப்பும்'' என்பதே இதன் கருப்பொருளாகவும் இருந்தது.

பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒரு தேசிய இணைப்பு நிகழ்ச்சித் திட்டமாக இருப்பதுடன் அதன் நடைமுறைப்படுத்தல் கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி மற்றும் முக்கிய குடியிருப்புத் திட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தனியார்துறை வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ஆகிய துறை ரீதியான துணை நிகழ்ச்சித் திட்டங்களினால் நடைமுறைப்படுத்தல் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்டம், அது தொடங்கப்பட்ட 1984 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியான ஆறு ஆண்டுகளைக் கொண்டிருப்பதுடன் இது பெரும் எண்ணிக்கையான குடும்பங் களைச் சென்றடையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

1988 இல் பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் வீடமைப்புத் துறையின் நடவடிக்கைகள் கட்டப்பட்ட அலகுகளின் நியதிகளில் மெதுவான வளர்ச்சியைக் காட்டியமைக்கு வீடமைப்பு நிதி நிறுவனங்களில் காணப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகள், ஆண்டின் இறுதிக் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தமை என்பன பெருமளவு காரணங்களாகும். நிதிக் கட்டுப்பாடுகள் 1988 இன் ''செவன சறன 1,000 இலட்சம் நிகழ்ச்சித் திட்டம்'' அறிமுகப்படுத்தப் பட்டதன் மூலமும் 1986இல் தொடக்கப்பட்ட ''செவன வீடமைப்புக் கடன் திட்டத்தின்'' மூலமும் ஓரளவிற்கு இலகுவாக்கப்பட்டன. முன்னைய நிகழ்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் வதிவோரின் வீடமைப்பு நிலைமையினை முன் னேற்றுவதற்குப்புகலிடக் கொடையாகப் பிரதேசசபைப் பிரதேசங்களில் குடும்பமொன்றிற்குஆகக் கூடியது ரூ. 5,000 உம் நகரசபைப் பிரதேசங்களில் ரூ. 7,000 உம் மாநகரசபைப் பகுதிகளில் ரூ. 10,000 உம்வழங்கப்பட்டன.

கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி மற்றும் முக்கிய குடியிருப்புத் திட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் ஆகியன அரசதுறை வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவற்றில் கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம்,

அட்டவணை 1.23

## பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் (1984 – 1988)

| விடயம் | வீடமைப்பு இலக்கு | அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | | பூர்த்தியடைந்த வீடமைப்பு அலகுகள் | | செலவு (ரூ. ப. இலட்சம்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | (குடும்பங்களின் எண்ணிக்கை) | வீடுகளின் கட்டுமானம் | உள்ளமைப்பு | வீடுகளின் கட்டுமானம் | உள்ளமைப்பு (குடும்பங்களின் எண்ணிக்கை) | திட்டமிடப்பட்டவை | உண்மையானவை |
| **கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (அ)** | | | | | | | |
| 1984 ... | 39,984 | 43,213 | — | 16,092 | — | 190.0 | 184.8 |
| 1985 ... | 40,679 | 43,977 | — | 41,135 | — | 255.3 | 231.1 |
| 1986 ... | 55,856 | 64,194 | — | 39,793 | — | 270.9 | 276.3 |
| 1987 ... | 36,700 | 42,969 | — | 45,245 | — | 215.0 | 222.5 |
| 1988* ... | 32.000 | 40,112 | — | 33,393 | — | — | 192.4 |
| **நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (ஆ)** | | | | | | | |
| 1985 ... | — | 7,584 | 14,788 | 2,314 | 14,788 | 150.3 | 38.5(இ) |
| 1986 ... | 12,792 | 10,419 | 6,539 | 6,751 | 6,539 | 123.0 | 72.4(இ) |
| 1987 ... | 10,828 | 7,334 | 7,013 | 7,839 | 7,013 | 115.3 | 76.7(இ) |
| 1988* ... | 10,070 | 18,485 | 4,025 | 6,847 | 4,025 | — | 105.2(இ) |

மூலம்: தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை

(*) தற்காலிகமானவை.

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச்சபை, செவன வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், மகாவலி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், யொவுன் நிவகன நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை உள்ளடக்குகிறது.

(ஆ) 'செவன சறன 1,000 இலட்சம் நிகழ்ச்சித் திட்டத்தின்', கீழ் செவன நிதியம் வீடமைப்புக் கொடைகளை வழங்கியுள்ளது.

(இ) செலவினம் உள்ளார்ந்த அமைப்பு, பொது வசதிகள் என்பனவற்றிற்கான செலவினை உள்ளடக்கவில்லை.

நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கீழான வீடமைப்புக் கடன்கள் சமூக மட்டத்தில் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களூடாகவும் கிராமப் புறங்களில் கிராமோதய சபைகளினுலும் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்குச் செவன நிதியத்திலிருந்தான உதவுதொகைகள் மூலம் மேலும் உதவி வழங்கப்பட்டது. அதேவேளை உணவு முத்திரையைப் பெறுபவர் கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கடன் பெறுநராக இருப்பின் அவர் 1988 செத்தெம்பர் 1 ஆம் நாளிலிருந்து தமது வீடமைப்புக் கடன்களை மீளக் செலுத்தவேண்டுமென்ற கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார். இக்கொடுப்பனவுகள் தற்போது செவன நிதியத்தினுல் ஈடுசெய்யப்படுகின்றன.

1988 இல் கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் நிறைவு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை நியதிகளில் பின்னடைவினைக் கொண்டிருந்த போதும் கடன்களைப் பெறும் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கை இலக்கை விஞ்சிவிட்டது. கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 32,000 குடும்பங்களுக்கு கடன்பெறுநர் ஒருவருக்கு ஆகக்கூடியது ரூ. 7,000 என்ற அடிப்படையில் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளவேளையில் 1988 இல் கடனைப் பெறுகின்ற குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கை 40,112 ஆக விளங்கியது. எனினும் இவ்வாண்டில் கட்டப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 1987 இன் 45,245 உடன் ஒப்பிடுகையில் 33,393 ஆக விளங்கியது. இதன் விளைவாக இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான செலவு 1987 இன் ரூ. 2,220 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 1,920 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இம் மெதுவான செயற்பாட்டிற்கு உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் ''கிராம எழுச்சி சிறப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை'' நடைமுறைப் படுத்த இயலாமல் போனமையே பெருமளவுக்குக் காரணமாகும்.

(1) இடத்தையும் காணிகளையும் முன்னேற்றுவதனையும் (11) சேரிகளையும் சுற்றுப்புறங்களையும் தரமுயர்த்துவதனையும் நோக்கமாகக் கொண்ட நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் 1988 இல் நன்கு முன்னேறியுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 10,070 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதெனினும் உண்மையில் நகரப் பகுதிகளில் 18,485 கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் உள்ளார்ந்த அமைப்பு வசதிகளைத் தரமுயர்த்துவதற்கும் 4,025 கடன்கள் வழங்கப்பட்டன. மொத்த வீடமைப்புக் கடன்களில் இவ்வாண்டுக் காலத்தில் முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை 1987 இன் 7,778 உடன் ஒப்பிடுகையில் 6,509 ஆக அமைந்தது. வீடமைப்பு மற்றும் உள்ளார்ந்த அமைப்புக் கடன்களின் செலவு 1987 இன் ரூ. 770 இலட்சத்திற்கெதிராக 1985 இல் ரூ. 1,050 இலட்சத்தினை அடைந்தது.

நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் நோர்வே—ஒல்லாந்து நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் உதவியளிக்கப்படும் பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினுலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுலும் நடைமுறைப்படுத்தப்படும் இந் நிகழ்ச்சித் திட்டம் 1988 இன் முதல் ஒன்பது மாதகாலப் பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது. இந் நிலைமை அதிகரித்த குழப்ப நிலைமையின் காரணமாக ஆண்டின் எஞ்சிய பகுதியில் மாற்றமடைந்தது. தற்காலிகத் தரவுகளின்படி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை 1988 இல் 521 தொழிலாளர் வீடுகளையும், 79 அலுவலர் விடுதிகளையும் நிறைவு செய்ததுடன் 1,173 கட்டிடங்களைத் தரமுயர்த்தியதுடன்

19 நல, குழந்தை நலம் காக்கும் நிலையங்களையும் நிறைவு செய்தது. இதே போன்று இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் 1988 இல் தோட்டத் தொழிலாளர்களுக்காக, 28 வீடுகளையும், 471 தொடர் அறைகளையும், 82 நல, குழந்தை நலம் காக்கும் நிலையங்களையும் கட்டித் தரமுயர்த்தியது. இத்துடன் கழிவறைகளையும் நீர்வழங்கல் வசதிகளையும் கொண்ட 1011 வீடுகள் வழங்கப்பட்டன.

மகாவலி முக்கிய குடியிருப்புத் திட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1988 இல் முறைகள் 'எச்', 'பி', 'சி' மற்றும் 'ஜி' இல் உள்ள 3,837 வீடுகளுக்கு ஓடுகள், மரங்கள் போன்ற கூரைப் பொருட்கள் வழங்கப்பட்டன. முக்கிய குடியிருப்புத் திட்டங்களில் வீடுகளைக் கட்டுவதற்கு நில ஆணையாளர் திணைக்களமும் தொடர்ந்து கடன்களை வழங்கியதன் காரணமாக மகாவலி மற்றும் முக்கிய குடியேற்றத் திட்டங்கள் குடியேற்ற மக்களைக் கவரத்தக்கதாக இருக்கின்றன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1988 இறுதிவரை 75,273 குடும்பங்கள் நன்மைகளைப் பெற்றன.

தற்காலிகத் தரவுகளின்படி 1988 இல் அரசதுறை வீடமைப்பின் மீதான செலவினம் 1987 இன் ரூ. 5,150 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,830 இலட்சமாக விளங்கியது. 1988 இன் மொத்தச் செலவினத்தில் ரூ. 2,980 இலட்சம் இவ்வாண்டில் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின்மீது செலவிடப்பட்டது.

1988 இல் தனியார் துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது. அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், ரெட்பாரு பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் என்பன தனியார் மற்றும் உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களுக்கு வீடமைப்புக்கான நிதியினை வழங்கும் முக்கிய மூலங்களாகத் தொடர்ந்தும் விளங்கின. தனியார் துறை, தேசிய சேமிப்பு வங்கியிலிருந்தும் வர்த்தக வங்கிகளில் குறிப்பாக இலங்கை வங்கி, மக்கள் வங்கியிலிருந்தும் வீடமைப்புக் கடன்களைப் பெற்றது.

தனியார்துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாநகர சபைப் பிரதேசத்தில் வீடமைப்பு நடவடிக்கைகளின் முக்கிய போக்கினைக் கொழும்பு மாநகர சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடங்களின் அடிப்படையில் இனங் கண்டு கொள்ள முடியும். 1988 இன் கொழும்பு மாநகர சபை 1987 இன் 596 ஒப்புதல்களுடன் ஒப்பிடுகையில் 531 வதிவிட கட்டட விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடங்களினது வகைகளின் பகுப்பாய்வு ஒப்பீட்டடிப்படையில் அட்டவணை 1.24 இல் தரப்பட்டுள்ளது.

தனிப்பட்டவர்களுக்கும் உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களுக்கும் வீடமைப்பிற்கு நிதியிடும் முக்கிய மூலமாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி தொடர்ந்தும் விளங்கியது. 1988 இல் வீடமைப்பு நோக்கங்களுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் 1987 இன் ரூ. 6,290 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 5,420 இலட்சமாக விளங்கியதுடன் இவ்வாண்டில் வங்கியினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 85 சதவீதத்திற்கும் வகை கூறின. கடன் தொகையில் ஏற்பட்ட குறைப்பிற்கு வீடமைப்புக் கடன்களின் மீதான மீள்பெறுகை வீதம் குறைவாக இருந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். 1988 இல் வீடமைப்புக் கடன்களின்மீது விதிக்கப்பட்ட வட்டி வீதம் ஆண்டிற்கு 2 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலான அளவுகளில் வேறுபட்டது.

அட்டவணை 1.24

**கொழும்பு மாநகர சபையினுல் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்(அ)**
**1987-1988**

| விடயம் | 1987 | 1986ற்கு மேலாக சதவீத மாற்றம் | 1988 | 1987ற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. புதிய வதிவிடக் கட்டடங்கள் ... | 596 | 45.4 | 531 | — 10.9 |
| 1.1 வீடுகள் ... | 246 | 9.8 | 205 | — 16.7 |
| 1.2 தொடர் மாடிகள் ... | 350 | 88.2 | 326 | — 6.8 |
| 2. வர்த்தகக் கட்டடங்கள் ... | 65 | — 20.7 | 53 | — 18.5 |
| 3. கைத்தொழில் கட்டடங்கள் ... | 5 | — 50.0 | 5 | — |
| 4. பள்ளிக்கூட கட்டடங்கள் ... | 3 | — | 1 | — 66.7 |
| 5. இணைப்புக்களும் திருத்தங்களும் ... | 382 | — 6.8 | 503 | 31.7 |
| 6. ஏனைய கட்டடங்கள் ... | 70 | — 29.3 | 50 | — 28.6 |
| மொத்தம் ... | 1,121 | 10.6 | 1,143 | 2.0 |

மூலம்: கொழும்பு மாநகர சபை

(அ) அரச, கூட்டுத்தாபனக் கட்டட வரைபடங்கள் நீங்கலாக

வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் வீடமைப்பு நோக்கங்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவுகளில் கடன்களை வழங்கியது. 1988 இல் வீடமைப்பு நோக்கங்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் 1987 இன் ரூ. 310 இலட்சத்திற்கெதிராக ரூ. 300 இலட்சமாக விளங்கின. கடன் பகிர்ந்தளிப்பதில் காணப்பட்ட மெதுவான முன்னேற்றத்திற்கு நீண்டகால நிதிகளைப் பெறமுடியாமல் இருந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். 1988 இல் கடன்களின்மீது விதிக்கப்பட்ட வட்டி வீதம் ஆண்டிற்கு 9.5 சதவீதத்திற்கும், 22 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

## நகர அபிவிருத்தி

1988 இல் நகர அபிவிருத்தி செயற்றிட்டத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மெதுவான தன்மையைக் கொண்டிருந்தன. இதற்கு நகர அபிவிருத்தி மேற்பார்வைச் சபையினுல் பொறுப்பேற்கப்பட்ட முக்கிய நிருவாக, வர்த்தக வாடிக்கையாளர் செயற்றிட்டங்கள் முற்றுப்பெற்று விட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும். இவ்வாண்டில் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை சுற்றாடலைத் தரமுயர்த்தல் மற்றும் தொழில் வாய்ப்பை உருவாக்குதல் என்பனவற்றுடன் தொடர்புற்ற செயற்றிட்டங்களின் மீதே அதன் கவனத்தைப் பெருமளவிற்குச் செலுத்தியது. இதனைப் பொறுத்தவரை நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை ஈடுபாடு கொண்டிருந்த முக்கியமானதொரு விடயம் ஒருங்கிணைக்கப்

பட்ட பேலியகொடை அபிவிருத்திச் செயற்றிட்டமாகும். கல்ஸ்டோப்பிலுள்ள உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, 1988 இன் கிராம எழுச்சி என்பன இவ்வாண்டில் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினுல் பொறுப்பேற்கப்பட்ட வாடிக்கையாளர் செயற்றிட்டங்களில் முக்கியமானவையாகும். உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியுடன் தொடர்பான வேலைகளில் ஏறத்தாழ 70 சதவீதம் 1988 இறுதியில் முற்றுப் பெற்றுவிட்டன.

1988 இல் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளின் மீதான மொத்தச் செலவினம் 1987 இன் ரூ. 4,520 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 5,100 இலட்சமாகக் காணப்பட்டது. மொத்தச் செலவினத்தில் ஏறத்தாழ 60 சதவீதம் வாடிக்கையாளர் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டங்களின்மீது ஏற்பட்டது. ரூ. 450 இலட்சம் கொண்ட மேலுமொரு தொகை கைத்தொழில் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்களின்மீது செலவிடப்பட்டது. அதேவேளை ரூ. 1,440 இலட்சம் நில வங்கியினுல் கையாளப்படும் செயற்றிட்டங்களின்மீது செலவிடப்பட்டது.

**வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்**

உள்நாட்டுக் குழப்பங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டபோதும், 1988 இல் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை 309 கிலோமீற்றர் நீளமான வீதி அமைப்பினை விரிவாக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் உலக வங்கியின் உதவியின் கீழ் கொழும்பு—கண்டி வீதியின் கட்டம்—1, குருநாகல்—மாதம்பை வீதி, மிறிஸ்வத்தை—கம்பகா மற்றும் யக்கல—கம்பகா வீதிகள் என்பனவற்றின் புத்தாக்க வேலைகள் முற்றுப் பெற்றன. மேலும் 1988 இல் 6 பாலங்களின் மீள் கட்டுமான புத்தாக்க வேலைகளும் முற்றுப் பெற்றன. அதேவேளை, வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபையினுல் பேணப்பட்ட வீதி அமைப்பின் மொத்த நீளம் 1987 இல் 25,556 கிலோமீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 1988 இல் 25,865 கிலோமீற்றர்களாக விளங்கியது.

இவ்வாண்டில் வீதிக் கட்டுமானத்தின்மீது ரூ. 7,070 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது. இது 1987 இல் செலவிடப்பட்ட தொகையான ரூ. 3,840 இலட்சத்தினைவிட ஏறத்தாழ இரு மடங்கு அதிகரிப்பாகும். ரூ. 2540 இலட்சம் கொண்டதொரு தொகை வீதிகளின் பேணலுக்காகச் செலவிடப்பட்டது.

முன்னைய ஆண்டினைப் போன்றே 1988 இலும் புகைவண்டிப் பாதைக் கிலோ மீற்றர் 1,948 கிலோமீற்றர்களாக மாற்றமின்றியிருந்தது. எனினும் புகைவண்டிப் பாதைகளின் புத்தாக்க வேலைகள், பாலம் கட்டும் தொழிற்கூடத்தில் புகைவண்டிப் பாலங்களை உருவாக்கல் மற்றும் மருதானைக்கும் மூகமைக்கும் இடையில் மூன்றுவது புகையிரதப் பாதையினை அமைக்கும் வேலை என்பன திருப்திகரமாகச் செயற்பட்டன.

## தொலைத் தொடர்பு

விரிவான, நம்பிக்கையான பணியினைப் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்குடன் தொலைத் தொடர்புத்துறையின் நடவடிக்கைகள் 1988 இல் மேலும் விரிவாக்கப்பட்டன. குறிப்பாக நகரம்சார், கிராமப்புறங்களில் ஆழி மற்றும் இணைப்பு இயலளவுகள் குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றம் கண்டன. அதேவேளை தற்போதுள்ள தொலைத்தொடர்பு அமைப்பினைத் தரமுயர்த்தவும் புத்தாக்கம் செய்வதற்குமாகப் பல வழிமுறைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப் பட்டன.

இவ்வாண்டில் தொடர்ந்த முக்கிய செயற்றிட்டங்களாக கொழும்பு பெரும் பாகப் பிரதேசத்தின் தொலைத் தொடர்புச் செயற்றிட்டம், கொழும்பு பிரதேச அபிவிருத்தித் திட்டம் கட்டம் IV, அம்பாந்தோட்டைப் பிரதேச அபிவிருத்திச் செயற்றிட்டம், கிராம இணைப்பகங்களுக்கு வானொலித் தொடர்புகளூடாகச் சந்தி சுற்றோட்டத்தினை ஏற்படுத்துதல், பொதுவான தொலைத் தொடர்புப் பணிகளை அபிவிருத்தி செய்தல் என்பன விளங்கின.

கொழும்பு பெரும்பாக பிரதேச அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ்க் கட்டட வேலைகளில் 29 சதவீதமும் தந்திக் கம்பி வேலைகளில் 7 சதவீதமும் கடத்தி வேலைகளில் 87 சதவீதமும் இவ்வாண்டின் இறுதியில் முற்றுப்பெற்றுள்ளன. அதேவேளை கொழும்பு பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டம் கட்டம் IV இன் மொத்த நிறுவுதல் வேலைகளில் 70 சதவீதம் முற்றுப்பெற்று விட்டன. இச்செயற்றிட்டம் 1989 ஏப்பிறலில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பின்லாந்து அபிவிருத்தி முகவரினால் நிதியிடப்பட்ட அம்பாந்தோட்டை பிரதேச அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் அங்குனுகொல—பெலஸ்ச, வலஸ்முல்ல, வீரகெட்டிய, பெலியத்தை, எம்பிலிப்பிட்டிய, செவனகல ஆகிய இடங்களிலுள்ள இணைப்பகங்களுக்கு வாடிக்கையாளர் நேரடி தொலைபேசி வசதிகள் வழங்கப் பட்டுள்ள வேளையில் இப் பிரதேசத்திலுள்ள சில பழைய இணைப்பகங்களுக்குப் பதிலாக புதிய எண்முறை இணைப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இக் குறிப்பிட்ட செயற்றிட்டங்களுக்குப் புறம்பாக, நாட்டின் பொதுவான தொலைத்தொடர்புப் பணிகளை அபிவிருத்தி செய்வதற்குப் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1988 இல் நாட்டின் தொலைபேசி அமைப்பிற்கு மேலதிகமாக 4,999 புதிய நேரடித் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்ட வேளையில் கல்கிசை பிரதேசத்தில் தற்போதுள்ள அமைப்புக்களுக்கு 3,280 புதிய நிலத்துக்கு அடியிலான தந்திக் கம்பிச் சோடிகள் வழங்கப்பட்டன. அதேவேளை டெலெக்ஸ் தொடர்புகளின் எண்ணிக்கை 1987 இன் 1,378 இலிருந்து 1988 இல் 1,516 இற்கு அதிகரித்தது.

இவ்வபிவிருத்திகள் காணப்பட்டபோதும், ஆண்டின் இறுதிச் காலாண்டில் அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்களினால் நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளின் பணிகள் பாதிக்கப்பட்டதன் காரணமாகத் தொலைத் தொடர்புப் பணிகளில் பின்னடைவு காணப்பட்டது. களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, அநுராதபுரம், குருநாகல் ஆகிய பகுதிகளின் தொலைத் தொடர்புப் பொறிகள் கணிசமானளவில் பாதிக்கப்பட்டவேளையில் கம்புறுப்பிட்டி, திகான, மடுல்சீம, மதுரட்ட ஆகிய இடங்களின் இணைப்பகத்திலுள்ள தொடர்பூட்டல் கருவிகள் சேதமாக்கப் பட்டன.

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம்**

பெரும்பாலான முக்கிய வேலைகளும் நீர்த்தேக்க அமைப்புக்களும் தொடர்பான கட்டுமான வேலைகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு விட்டமையினுல் 1988 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய கவனம் வேளாண்மை உற்பத்தி, கீழ் நீரோட்ட அபிவிருத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், குடும்ப வருமானங்களை உயர்த்துதல் என்பவற்றின் மீது காணப்பட்டது. முதன்மைத்துவ வேலைகளின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய பிரதேசங்களில் முதன்மைத்துவ வேலைகளை நிர்மாணிப்பதன் மூலமும் வேளாண்மைக் குடும்பங்களை குடியமர்த்தல் மூலமும், இடம் பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காகப் பொருளாதார, சமூக உள்ளமைப்புக்களை முன்னேற்றுவதிலேயே கீழ் நீரோட்ட அபிவிருத்தி வேலையின் முக்கிய கவனம் தொடர்ந்து காணப்பட்டது. 1988 இறுதிவரை எல்லாச் செயற்றிட்டங்கள்மீதும் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 462,790 இலட்சமாக அமைந்தது. இதில் ரூ. 31,910 இலட்சம் 1988 இல் செலவிடப்பட்டது.

இவ்வாண்டில் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் முக்கிய நீர் மின்வலுச் செயற்றிட்டங்களான விக்டோரியா (523 கிகாம), கொத்மலை (438 கிகாம), இரந்தெனிகல (213 கிகாம) என்பனவற்றினுல் 1,174 கிகாவாட் மணித்தியால வலு உருவாக்கப்பட்டது.

விக்டோரியா சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1988 இல் குருதெனியாவின் வலதுகரையில் பழைய குருதெனிய பெரியகடைக்குப் பதிலாக மேலதிக நகராக்கத்தின் கட்டுமான வேலை நடைபெற்றது. விக்டோரியா செயற்றிட்டத்தின் மீது 1988 இறுதி வரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 92,600 இலட்சமாகும். இதில் ரூ. 2,160 இலட்சம் 1988 இல் செலவிடப்பட்டது.

கொத்மலைச் சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொத்மலையின் புதிய நகரத்தில் குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டம் மீதான கட்டுமான வேலைகள், பல புதிய வீதிகள், சமூக உள்ளார்ந்த அமைப்பு வசதிகளுக்கான ஒழுங்குகள் என்பன நடைபெற்றன. மல்தெனிய வைத்தியசாலைக்கான முன்னேற்றங்களும் மூன்று நலத்துறை நிலையங்களுக்கான கட்டுமான வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டன. 1988 இறுதியில் கொத்மலைச் செயற்றிட்டத்தின் ஒன்று சேர்ந்த செலவு ரூ. 96,830 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 2,160 இலட்சம் 1988 இல் ஏற்பட்டது.

இவ்வாண்டில் இரந்தெனிகல செயற்றிட்டத்தின் கீழ் தற்போதுள்ள வீதிகளை முன்னேற்றும் வேலைகள், சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான ஆய்வுகள் கீர்த்தி பண்டாரபுர புதிய நகரத்திற்கு மின் வழங்கும் திட்டங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இரந்தெனிகல செயற்றிட்டம் மீதான மொத்தச் செலவு 1988 இறுதியில் ரூ. 59,850 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 2,440 இலட்சம் 1988 இல் செலவிடப்பட்டது.

அட்டவணை 1.25

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் - செலவு மதிப்பீடுகள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செயற்றிட்டம் | 1988 இற்கான வரவு செலவுத்திட்ட செலவினம் | | | 1988க்கான உண்மைச் செலவினம் (அ) | 1988 இறுதி வரையான ஒன்று சேர்ந்த செலவினம் (அ) |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்குகள் | துணை ஒதுக்குகள் | மொத்தம் | | |
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் ... | 234 | — | 234 | 216 | 9,260 |
| 2. கொத்மலை நீர்த்தேக்கம் ... | 361 | — | 361 | 226 | 9,683 |
| 3. இரந்தெனிகல நீர்த்தேக்கம் ... | 176 | — | 176 | 244 | 5,985 |
| 4. மாதுறுஓயாவும் கால்வாயும் ... | — | — | — | — | 2,645 |
| 5. மினிப்பே அணைக்கட்டு மாற்று வடிகால் கால்வாய் ... | — | — | — | — | 1,246 |
| 6. நீர்ப்பாசனமுறை 'பி' ... | 1,606 | — | 1,606 | 516 | 5,880 |
| 7. நீர்ப்பாசனமுறை 'சி' ... | 1,568 | — | 1,568 | 1,044 | 5,375 |
| 8. நீர்ப்பாசன முறை 'ஜி' ... | 82 | — | 82 | 66 | 460 |
| 9. நீர்ப்பாசன முறை 'எல்' ... | — | — | — | 82 | 82 |
| 10. நிலை I ... | — | — | — | — | 529 |
| 11. நிலை II ... | 26 | — | 26 | 28 | 2,415 |
| 12. பேணல் ... | 440 | — | 440 | 373 | 1,036 |
| 13. மண் சரிவினால் பாதிக்கப்பட்டோரின் மீள் குடியிருப்பு ... | 113 | — | 113 | 115 | 206 |
| 14. ஏனையவைகள் ... | 444 | — | 444 | 281 | 1,477 |
| மொத்தம் ... | 5,050 | — | 5,050 | 3,191 | 46,279 |

மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை

(அ) தற்காலிகமானவை.

முந்திய ஆண்டினைப்போன்று செலவில் கணிசமான அளவு தொகை கீழ் நீரோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஏற்பட்டது. 1988 இல் நீர்ப் பாசனத் திட்டங்களின் முறை 'பி', 'சி' என்பவற்றின் அபிவிருத்தியில் செலவிடப் பட்ட மொத்தத் தொகை முறையே ரூ. 5,160 இலட்சமாகவும், ரூ. 10,440 இலட்சமாகவும் விளங்கின. 1988 இறுதியில் இவ்விரு திட்டங்களிலும் ஏற்பட்ட ஒன்று சேர்ந்த செலவு முறையே ரூ. 58,800 இலட்சமாகவும், ரூ. 53,750 இலட்சமாகவும் விளங்கின.

தற்காலிகத் தரவுகளின்படி, 1987/88 பெரும்போகத்தில் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 52,277 எக்டேயர்களாக விளங்கி சென்ற ஆண்டின் இதே பருவத்தினைவிட

## அட்டவணை 1.26

### மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாக பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

எக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1984/85 | சிறு போகம் 1985 | மொத்தம் 1985 | பெரும் போகம் 1985/86 | சிறு போகம் 1986 | மொத்தம் 1986 | பெரும் போகம் 1986/87 | சிறு போகம் 1987 | மொத்தம் 1987 | பெரும் போகம் 1987/88 (அ) | சிறு போகம் 1988 (அ) | மொத்தம் 1988 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' ... ... | 23,309 | 18,319 | 41,628 | 24,298 | 21,225 | 45,523 | 24,965 | 13,058 | 38,023 | 24,847 | 14,307 | 39,154 |
| நெல் ... ... | 22,957 | 9,709 | 32,666 | 23,449 | 8,983 | 32,432 | 23,317 | 5,933 | 29,250 | 23,560 | 5,428 | 28,988 |
| ஏனைய பயிர்கள் ... ... | 352 | 8,610 | 8,962 | 849 | 12,242 | 13,091 | 1,648 | 7,125 | 8,773 | 1,287 | 8,879 | 10,166 |
| முறை 'பி' ... ... | 2,535 | 2,246 | 4,781 | 3,851 | 3,554 | 7,405 | 5,961 | 5,805 | 11,766 | 8,759 | 8,190 | 16,949 |
| நெல் ... ... | 2,472 | 2,061 | 4,533 | 3,686 | 3,463 | 7,149 | 5,120 | 5,479 | 10,599 | 8,368 | 7,722 | 1,6090 |
| ஏனைய பயிர்கள் ... ... | 63 | 185 | 248 | 165 | 91 | 256 | 841 | 326 | 1,167 | 391 | 468 | 859 |
| முறை 'சி' ... ... | 7,545 | 4,857 | 12,402 | 9,358 | 7,868 | 17,226 | 10,139 | 9,588 | 19,727 | 14,164 | 4,154 | 18,318 |
| நெல் ... ... | 6,086 | 4,827 | 10,913 | 7,945 | 7,782 | 15,727 | 9,057 | 9,480 | 18,537 | 12,420 | 4,090 | 16,510 |
| ஏனைய பயிர்கள் ... ... | 1,459 | 30 | 1,489 | 1,413 | 86 | 1,499 | 1,082 | 108 | 1,190 | 1,744 | 64 | 1,808 |
| முறை 'ஜி' ... ... | 3,258 | 2,106 | 5,364 | 3,315 | 2,731 | 6,046 | 3,279 | 2,709 | 5,988 | 4,507 | 3,109 | 7,616 |
| நெல் ... ... | 2,941 | 1,198 | 4,139 | 3,153 | 1,423 | 4,576 | 3,220 | 1,176 | 4,396 | 4,094 | 1,236 | 5,330 |
| ஏனைய பயிர்கள் ... ... | 317 | 908 | 1,225 | 162 | 1,308 | 1,470 | 59 | 1,533 | 1,592 | 413 | 1,873 | 2,286 |
| மொத்தம் ... ... | 36,647 | 27,528 | 64,175 | 40,822 | 35,378 | 76,200 | 44,344 | 31,160 | 75,504 | 52,277 | 29,760 | 82,037 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

18 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இம்முன்னேற்றமானது பெரும்பாலும் குறிப்பாக முறை 'பி', 'சி' என்பவற்றில் அதிக அளவு நிலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதற்கு உதவிய அதிக அளவில் கிடைக்கத்தக்கதாகவிருந்த நீர்ப்பாசன வசதி காரணமாக ஏற்பட்டதாகும். மாறாக 1988 சிறுபோக காலத்தில் மகாவலி யின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு பெரும்பாலும் முறை 'சி' யில் பயிரிடப்பட்ட பரப்பு குறைவடைந்தமை காரண மாக 1,400 எக்டேயர்களால் அல்லது 4 சதவீதத்தினால் 29,760 எக்டேயர் களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1988 பயிர்ச்செய்கையாண்டில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் நெல் 82 சதவீதத்திற்கு வகை கூறியது. நெல்லின் கீழான பரப்பளவு பெரும்போக பருவத்தில் பயிரிடப்பட்ட பிரதேசத்தில் 93 சதவீதமாகவும் சிறுபோகத்தில் பயிரிடப்பட்டதில் 62 சதவீதமாகவும் விளங்கியது. 1988 பயிர்ச்செய்கையாண் டில் முறை 'பி', 'சி' என்பவற்றில் நெல்லின் கீழான நிலப்பரப்பு முறையே 52 சதவீதத்தினாலும், 21 சதவீதத்தினாலும் அதிகரித்தவேளையில் முறை 'ஜி', 'எச்' என்பவை முறையே 11 சதவீதத்தினாலும், 1 சதவீதத்தினாலும் வீழ்ச்சி யுற்றன. ஏனைய களப் பயிர்களின் கீழான நிலப்பரப்பு 1988 இல் 19 சதவீதத் தினால் 15,119 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

1988 பயிர்ச்செய்கை ஆண்டில் மகாவலியின் ஆளுமைக்குட்பட்ட பிர தேசத்தின் மொத்த நெல் உற்பத்தி 266,479 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப் பட்டது. இது 1988 இல் நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் 11 சதவீதமாகும். 'எச்' பிரதேச உற்பத்தி மட்டும் 103,870 மெற்றிக் தொன்களாக அமைந்து மகாவலிப் பிரதேசங்களின் மொத்த நெல் உற்பத்தியில் 39 சதவீதத்திற்கு வகை கூறியது. எனினும் இது முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்டதனைவிட 11 சதவீதம் குறைவானதாகும்.

1988 இறுதிவரை முறை 'எச்' இல் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 28,866 ஆகும். இவ்வாண்டில் 995 குடும்பங்கள் முறை 'சி' யில் குடியமர்த்தப்பட்டதன்மூலம் 1988 இறுதியில் இம்முறைகளில் குடியமர் த்தப்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 14,821 ஆக அமைந்தது. 1988 இறுதியில் முறை 'பி', 'ஜி' என்பவற்றில் குடியமர்த்தப்பட்ட குடும்பங் களின் எண்ணிக்கை முறையே 11,404 ஆகவும், 3,608 ஆகவும் விளங்கின.

**ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி**

நீர் வழங்கல், வடிகால் வசதிகளை முன்னேற்றுவதிலும், வேளாண்மை உற்பத்தியையும் நிலப் பயன்பாட்டினையும் உச்சப்படுத்துவதிலும் நீர்ப்பாசன அபிவிருத்தி முக்கிய காரணியாக விளங்குகின்றது. விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தினால் உள்ளடக்கப்படாத பிரதேசங்களின் நீர்ப்பாசன அபி விருத்தி வேலைகளில் தற்போதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் புத்தாக்கம் முக்கிய பங்கினை வகித்தபோதிலும் அமைப்பு முறை, பண்ணை மட்டம் ஆகிய இரண்டிலும் தற்போதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை நவீனமயமாக்கலிலும் பேணுவதிலும் தாக்கமான நீர் முகாமைத்துவத்திலும் நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அதி உயர்ந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறையின் வெற்றியினைக் கருத்திற் கொண்டு இம்முறையும் நீர்ப்

பாசனக் குடியேற்றத் திட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டது. இதற்குட்பட்ட பிரதேசம் 1988 இல் 1,012 எக்டேயருக்குக் குறைவாக (2,500 ஏக்கர்கள்) விளங்கியது. ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறையானது நீர்ப்பாசன முறைகளின் முகாமைத்துவத்தில் வேளாண்மையாளரின் பங்குபற்றலை அதிகரிப்பதற்குக் கூடிய முக்கியத்துவம் அளித்தது.

செயற்றிட்டப் பிரதேசங்களில் நிலவிய அமைதியற்ற நிலைமை அதிகரித்தமை காரணமாக 1988 இறுதியின் சில மாதங்களில் நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான கட்டுமான புத்தாக்க வேலைகள் பின்னடைவினைக் கொண்டிருந்தன. கிருண்டிஓயா, நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்றிட்டத்தின் கட்டம் 1 இன் கீழான நீர்ப்பாசன முறை அபிவிருத்தி திட்டமிடப்பட்டவாறு 1988 இல் பூர்த்தி செய்யப்படாமைக்கு 1988 இன் நான்காவது காலாண்டில் நிலவிய அமைதியற்ற நிலைமைகள் காரணமாக நெல் ஒதுக்கீட்டிற்காக நிலத்தை மட்டப்படுத்தும் வேலை நிறுத்தப்பட்டமை காரணமாகும். நீர் வழங்கல் திட்டத்தின் முதலாம் கட்ட வேலையும் 1988 நவெம்பரில் குழப்பங்கள் காரணமாக நிறுத்தப்பட வேண்டியிருந்தது. கிருண்டிஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் 1988 இல் 600 எக்டேயர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டன. செயற்றிட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ஏறக்குறைய 350 எக்டேயர் நீர்ப்பாசனக் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. கிருண்டிஓயா நீர்ப்பாசன, குடியமர்த்தல் செயற்திட்டத்தின் கட்டம் 1, 11 ஆகியவற்றின் கீழ் 1988 இல் ஏறக்குறைய 307 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1988 இல் இச்செயற்றிட்டத்தின் கட்டம் 1 தொடர்பான மொத்தச் செலவு ரூ. 1,040 இலட்சமாக அமைந்தவேளையில் கட்டம் 11 இன் செலவு ரூ. 500 இலட்சமாக விளங்கியது.

1988 இல் பூர்த்தியாக்கப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டிருந்த நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தின் 11 ஆம் கட்டம் மீதான வேலை ஆண்டின் இறுதிப் பகுதியில் நிலவிய அரசியல் குழப்பங்கள் காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இச்செயற்றிட்டம் மீதான மொத்தச் செலவு 1988 இல் ரூ. 4,160 இலட்சமாக அமைந்தவேளையில் 1987 இறுதி வரையிலான செலவு ரூ. 9,540 இலட்சமாக விளங்கியது.

கிராம நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் கீழ் 1988 இல் 63 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. 1988 இறுதி வரை இச்செயற்றிட்டங்கள் மீது செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,280 இலட்சமாகும்.

**ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் சமநிலையான பிரதேச அபிவிருத்திக்கான அனைத்தையும் உள்ளடக்கிய திட்டமிடலின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பெருமளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து நன்மை பெற முடியாத பிரதேசங்களிலுள்ள மக்களின் உற்பத்தியினளவு, வருமானம், தொழில் வாய்ப்பு, வாழ்க்கைத் தரம் என்பவற்றின் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்தும் முக்கியத்துவம் வழங்கியது. ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1988 இல் 14 மாவட்டங்களினை உள்ளடக்கியிருந்தது. புதிய மாவட்டங்கள் எதுவும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்

## அட்டவணை 1.27

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1987–1988

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாவட்டம் (அ) | | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | செலவினம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1987 முடிவில் உள்ளபடி | 1988 முடிவில் உள்ளபடி (ஆ) | 1987ஆம் ஆண்டின் செலவு | 1988ஆம் ஆண்டின் செலவு (ஆ) |
| 1. மாத்தறை | (1979) ... | சீடா (சுவீடன்) | 338 | 37 | 375 | 152 | 174 | 34 | 22 |
| 2. அம்பாந்தோட்டை | (1979) ... | நொராட்( நோர்வே) | 686 | 14 | 700 | 382 | 450 | 72 | 68 |
| 3. நுவரெலியா | (1980) ... | நெதர்லாந்து | 510 | 10 | 520 | 245 | 287 | 41 | 42 |
| 4. மாத்தளை | (1981) ... | உலக வங்கி | 307 | 145 | 452 | 278 | 302 | 33 | 24 |
| 5. புத்தளம் | (1981) ... | உலக வங்கி | 397 | 187 | 584 | 427 | 467 | 49 | 40 |
| 6. பதுளை | (1982) ... | வே. அ. ப. நி. | 500 | 110 | 610 | 254 | 277 | 56 | 23 |
| 7. வவுனியா | (1984) ... | உலக வங்கி | 246 | 133 | 379 | 63.6 | 63.7 | 1 | 0.1 |
| 8. மன்னார் | (1984) ... | உலக வங்கி | 220 | 118 | 338 | 55.3 | 55.4 | 1.3 | 0.1 |
| 9. இரத்தினபுரி | (1984) ... | நெதர்லாந்து | 209 | 4 | 214 | 81 | 107 | 29 | 26 |
| 10. மொனறாகலை | (1984) ... | நொராட் | 392 | 8 | 400 | 102 | 148 | 55 | 46 |
| 11. முல்லைத்தீவு | (1985) ... | நெதர்லாந்து | 90 | 2 | 92 | 5.3 | 5.4 | 1.3 | 0.1 |
| 12. கேகாலை | (1986) ... | வே. அ. ப. நி. | 262 | 147 | 409 | 35 | 72.3 | 25 | 37.3 |
| 13. களுத்துறை | (1937) ... | பின்லாந்து ப.அ.உ. | 224 | 38 | 262 | 7 | 64 | 7 | 57 |
| 14. கண்டி | (1987) ... | சே. கூ. குடியரசு | 32 | — | 32 | 0.2 | 1.7 | 0.2 | 1.5 |

(அ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு.

படாவிடினும் யப்பானிய அரசினுல் நிதியிடப்படவிருந்த கம்பகா மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மீதான ஆரம்ப வேலை இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

1988 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவு 1987 இன் ரூ. 4,050 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 3,870 இலட்சமாக விளங்கியது. 1988 இறுதி வரையில் எல்லாச் செயற்றிட்டங்கள் மீதும் ஏற்பட்ட ஒன்று சேர்ந்த செலவுகள் 1987 இலும், 1988 இலும் ஏற்பட்ட செலவுகளுடன் அட்டவணை 1.27 இல் காட்டப்பட்டுள்ளது.

மன்னுர், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்து வரும் அரசியல் குழப்பங்கள் காரணமாக 1988 இலும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஏனைய செயற்றிட்டங்கள் குறிப்பாக மொனருகலை, மாத்தறை, பதுளை மாவட்டங்களுக்கானவையும் அமைதியற்ற நிலைமை காரணமாக ஆண்டின் இறுதிப் பகுதியில் பின்னடைவினைக் கொண்டிருந்தன.